**இலங்கை பத்திரிகை பேரவை - 2023**

**-----------------------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை பத்திரிகை பேரவையின் (**"**பேரவை'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பேரவையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பேரவையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பேரவை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பேரவை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பேரவையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பேரவையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பேரவை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பேரவையின் கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 2.1.1 இன் பிரகாரம் சொத்தொன்றை அகற்றும் போது, அந்த சொத்துக்கள் தொடர்பான மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்களும் சொத்து அகற்றலின் போது சீராக்கம் | அகற்றப்பட்ட சொத்துக்களுக்கான மீள்மதிப்பீட்டு மிகை சரியான கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் திருத்தப்படும். | கணக்கீட்டுக் கொள்கைக்கு இணங்க மீள்மதிப்பீட்டு மிகை சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட வேண்டிய போதிலும் , பேரவையால் மீளாய்வாண்டில் அகற்றப்பட்ட கணனிகள் தொடர்பான ரூபா 119,680 ஆன மீள்மதிப்பீட்டு மிகை சீராக்கம் செய்யப்படாமல் மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | | எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிதி நிலைமைக் கூற்றில் திறைசேரியிலிருந்து பெறப்பட்ட மூலதன மானியக் கணக்கில் ரூபா 896,081 ஆன வரவு மீதியொன்று காணப்பட்ட போதிலும், கணக்காய்வின் கணிப்பீட்டின் பிரகாரம் அம்மீதி ரூபா 4,186,082 ஆன செலவு மீதியொன்றாக காணப்பட்டதால் ரூபா 5,082,163 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டின் அரசின் மூலதன மானியம் பெறப்படாமையால் அரச மூலதன கணக்கில் வரவு மீதியொன்று காட்டப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படும். | மூலதன மானியம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் பேரவையின் ஆண்டு விழாவிற்கு மண்டப வசதிகளைப் பெறுவதற்காக இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்தப்பட்ட மீளப்பெறக்கூடிய வைப்புத்தொகையான ரூபா 25,000 ஆனது மீளப்பெறக்கூடிய வைப்புத்தொகையாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் அங்கீகரிக்கப்படாது மீளாய்வாண்டில் செலவொன்றாக கணக்கிடப்பட்டதன் காரணமாக, மீளாய்வாண்டில் மீளப்பெறக்கூடிய வைப்புத்தொகை மற்றும் இலாபம் அப்பெறுமதியால் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தன. | தவறுதலாக மீளப்பெறக்கூடிய வைப்புத்தொகையான ரூபா 25,000 ஆன தொகை பேரவையின் நிதியத்திற்கு சீராக்கப்பட்டிருந்தது.அதை திரத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். இத்தொகை 2024 சனவரி மாதத்தில் பெறப்பட்டிருந்தது. | நடைமுறைச் சொத்துக்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | டிப்ளோமா கற்கைநெறி மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு பேரவையின் பணத்திலிருந்து 52 டிசேர்ட்டுகளுக்கு ரூபா 87,100 ஆன தொகையொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் அதில் 45 டிசேர்ட்டுகளுக்கு | எஞ்சியுள்ள டிசேர்ட்டுக்கள் உரிய மாணவர்களுக்கு எதிர்காலத்தில் வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதால் குறிப்பிட்ட கிரயம் இருப்பொன்றாக அங்கீகரிக்கப்படவில்லை.எதி | எஞ்சியுள்ள தொகை சரியாக சரியாக இனங்காணப்பட வேண்டும். |

| | |
|---|---|
| மாணவர்களிடமிருந்து பணம் பெறப்பட்டிருந்த போதிலும், எஞ்சியுள்ள 07 டிசேர்ட்டுகளுக்கான ரூபா 11,725 ஆன இருப்பு மீதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ர்வரம் கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1973 இன் 05 ஆம் இலக்க இலங்கை பத்திரிகை பேரவை அதிகாரச் சட்டத்தின் 25 ஆம் பிரிவு | தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் மின் செய்தித்தாள் வெளியீடு படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ளதுடன் அந்த செய்தித்தாள்களின் பதிவுகள் தொடர்பாக அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகள் திருத்தப்படுதற்கு பேரவையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலத்திரனியல் ஊடகங்கள் தொடர்பில் ஒலிபரப்பு அதிகார சபையொன்றை ஆரம்பிக்க அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கேற்ப இலங்கை பத்திரிகை பேரவை அதிகாரச் சட்டம் திருத்தப்படும். | பத்திரிகை பேரவை அதிகாரச் சட்டம் தொடர்பான திருத்தங்கள் உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ஆ) | 1973 இன் 05 ஆம் இலக்க இலங்கை பத்திரிகை பேரவை அதிகாரச் சட்டத்தின் 26 ஆம் பிரிவு | ஒவ்வொரு செய்தித்தாளினதும் அச்சீட்டாளர் மற்றும் வெளியீட்டாளரினால் அச்சிடப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட ஒவ்வொரு வெளியீடு மற்றும் மற்றொரு அச்சொன்று அல்லது அச்சின் பிரதியொன்று ஆணையாளரின் அலுவலகத்திற்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படாமையால் 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை செய்தித்தாள்கள் மற்றும் சஞ்சிகைகளைப் பெற்றுக் கொள்வதற்கு ரூபா 532,900 மேலதிக செலவொன்று செய்யப்படுவதற்கு நேரிட்டது. | பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுத்து மூலமாக மற்றும் வாய்மொழியாக பத்திரிகை ஆசிரியர்களுக்கும், சட்டப் பிரிவுகளுக்கும் தெரிவிக்கப்பட்ட போதிலும் அச்சீட்டுச் செலவு , போக்குவரத்துச் செலவு அதிகரிப்பால், உரிய நேரத்தில் வழங்குவதற்கு முடியாதிருந்தமையால் ஒரு பிரதியொன்று வாங்கப்படுகிறது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 1973 இன் 05 ஆம் இலக்க இலங்கை பத்திரிகை பேரவை அதிகாரச் சட்டத்தின் 30 ஆம் பிரிவு | பதிவு செய்யப்படாது சந்தைக்கு வழங்கப்படுகின்ற செய்தித்தாள்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு தேவையான விதிகள் மற்றும் கட்டளைகள் செயற்படுத்தப்படவில்லை. | 2021 ஜனவரி 12 திகதிய அமைச்சரவை முடிவின்படி, அமைச்சின் செயலாளர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. சட்டம் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்டத்தின் பிரகாரம் விதிகள் மற்றும் கட்டளைகள் செயற்படுத்தப்பட வேண்டும். |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (ஈ) | நி.பி 104(1),(3),(4) | 2023 பெப்ரவரி 01 ஆம் திகதி இடம்பெற்ற முச்சக்கரவண்டி விபத்து தொடர்பில் விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டு 03 மாதங்களுக்கு மேற்பட்டிருந்த போதிலும் சேதங்கள் தொடர்பில் ஆரம்ப அறிக்கையொன்று வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சேதங்கள் தொடர்பான பொது 284 மாதிரிப்படிவத்தின் பிரகாரம் முழுமையான அறிக்கையொன்று 2024 ஜூன் 19 வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில், இதுபோன்ற சூழ்நிலைகளில், குறிப்பிட்ட காலத்திற்குள் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | நி.பி 751 மற்றும் 754 | சபையினால் மீளாய்வாண்டில் பொருட்பதிவேட்டுப் புத்தகங்களில் தொடக்க நிலுவைகள் மட்டுமே காட்டப்பட்டிருந்ததுடன் ஆண்டின் பெறுவனவு, விநியோகம் மற்றும் மீளாய்வாண்டின் இறுதி திகதியிலான நிலுவையொன்று காட்டப்பட்டிருக்கவில்லை. | குறைந்தளவு பணியாளர்களுடன் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் பொருட்பதிவேடுகளை நாளதுவரையாக்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பதிவேடு நாளது வரையாக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இருப்பு இணக்க அறிக்கையின்றி பௌதீக ரீதியாக பெறப்பட்ட இருப்புக்களின் நிலுவை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | நி.பி 756(6) | ஒவ்வொரு ஆண்டும் திசெம்பர் 15 அல்லது அதற்கு முனனர் பொருள் மெய்மையாய்வு குழுவொன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும் , 2023 ஆம் ஆண்டிற்காக நியமிக்கப்பட வேண்டிய பொருள் மெய்மையாய்வு குழுவொன்று 2024 சனவரி 10 வரை நியமிக்கப்படாததுடன் 2023 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2024 ஜுன் 19 வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 10 அதிகாரிகளுக்கான பற்றாக்குறை காணப்பட்டமையால் குழு நியமனம் தாமதமானது. | பொருள் மெய்மையாய்வு அறிக்கை நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 363,321 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,653,272 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,289,905 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இப் பின்னடைவிற்கு அரசாங்க மானியம் ரூபா 960,000 ஆல் குறைவடைந்தமை, பயன்பாட்டுச் செலவினம் ரூபா 1,328,688 ஆல் மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவினம் ரூபா 669,957 ஆல் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் 2023 ஆம் ஆண்டில் ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு இலவசமாக வழங்குவதற்காக ரூபா 316,837 பெறுமதியான பாடசாலை உபகரணப் பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 72,330 பெறுமதியான 13 பாடசாலை உபகரணப் பெட்டிகள் மற்றும் 2023 | 2021 இல் எஞ்சியிருந்த 13 பெட்டிகள் மற்றும் 2022 இல் எஞ்சியிருந்த 02 பெட்டிகளுடன் 15 பெட்டிகள் ஊடகவியலாளர்கள் வருகை தராமையால் எஞ்சியிருந்தன. | **குறிப்பிட்ட** பாடசாலை உபகரணங்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 7,455 பெறுமதியான 02 பாடசாலை உபகரணப் பெட்டிகள் கணக்காய்வுத் திகதியான 2024 மே 17 வரை களஞ்சியசாலையில் காணப்பட்டன. | | |
| (ஆ) | மீளாய்வாண்டில் செய்தித்தாள்களுக்கு எதிராக பொதுமக்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட 48 முறைப்பாடுகள் மற்றும் 2022 ஆம் ஆண்டில் தீர்க்கப்படாது முன் கொண்டு வரப்பட்ட 23 முறைப்பாடுகள் உட்பட மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 71 ஆக இருந்ததடன் அவற்றில் 16 முறைப்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதியில் விசாரிக்கப்பட்டு வருவதாக காணப்பட்டன. | பல்வேறு காரணங்களால் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தாமதம் மற்றும் பல்வேறு காரணங்களால் செயல்படுத்தப்படாமல் இருத்தல் மற்றும் கட்டுப்படுத்த முடியாத காரணங்களால் விசாரணையில் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது. | விசாரணை நடவடிக்கைகளை விரைவு படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்,பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட பயன்படுத்தக்கூடிய ரூபா 365,668 மதிப்புள்ள தொகுக்கப்படாத புதிய லெப்டொப் கணனியொன்று 2021 திசெம்பர் மாதம் முதல் குறைப்பயன்பாடுடையதாக காணப்பட்டது. | லெப்டொப் கணனி நேரடி நிகழ்ச்சித் திட்டத்திற்காக பெறப்பட்டுள்ளது. அதை விளைவற்றதாக வைக்காமல் பயன்படுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டது. | கொள்வனவு செய்யப்பட்ட கணனி நிகழ்ச்சித் திட்டத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.3 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான விபத்திற்குள்ளான முச்சக்கர வண்டியின் பழுதுபார்ப்பிற்காக கணக்காய்வுத் திகதி வரை ரூபா 237,552 மட்டுமே காப்பீட்டு கம்பனியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், ரூபா 339,102 பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது சபையினால் ரூபா 576,654 ஆனது 2024 யூலை 23 | விபத்தின் பின்னர் இந்த வாகனம் பழுதுபார்ப்பதற்காக இலங்கை முகவர் கம்பனியொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. காப்பீட்டு கம்பனியுடன் ஏற்பட்ட பிரச்னையால் தாமதமானது. சுரியாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணம் செலுத்தப்படடுள்ளது. | சபைக்கு ஏற்பட்ட நட்டம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டம். |

வரை செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கையேட்டின் பிரிவு 6.6 இன் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்த 02 மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2024 மே 15 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பத்திரிகை பேரவை கட்டிடம் புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டதால் 2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் சமர்ப்பிப்பதற்கு தாமதமாகியிருந்தது. | தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் குறிப்பட்ட கால எல்லைக்குள் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |